DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC 361/2019

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.முனியம்மாள் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 to A4, A6, A7 present A5 absent. Peititon filed and allowed.)
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of _ 21.01.2025 at 01.05 P.M.

முதல் விசாரணை:–

1. நான் பி.கீரந்தை கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும்.

2. எனக்கும், எதிரிகளுக்கும் எனது பூர்வீக பாதை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் காலை 07.00 மணியளவில் ராமசாமி பாதையில் முள்வேலி கொண்டு அடைத்தார். நான் ஏன் முள்வேலி கொண்டு பாதை அடைத்தீர்கள் என்று கேட்டபோது என்னை மிகவும் தரக்குறைவாக மிகவும் அசிங்கமாக பேசினார். நொப்பமயனே, தேவிடியா மயனே உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று பேசி மிரட்டினார். பின்னர் கத்திகம்பால் என்னை கொத்தினார். எனக்கு நெற்றியில் காயம்பட்டது.

3. ராமர் என்பவரும் என்னை கத்திகம்பால் இடது மற்றும் வலது தலையில் கொத்தினார். மற்ற எதிரிகள் சவுந்திரம், ராஜகனி, லெட்சுமி, ராஜேஸ்வரி, லெட்சுமணன் ஆகியோர் கல்லால் எறிந்தார்கள். எனக்கு உடல் முழுவதும் காயம்பட்டது.

4. சம்பவ இடத்தில் எனது மகள் மல்லிகாதேவி, மற்றும் வில்வக்கனி ஆகியோர் இருந்தார்கள். சண்டையை விலக்கிவிட்டார்கள். காயம்பட்ட நான் ஆட்டோவில் ஏறி கீழக்கரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது 10.00 மணியளவில் போலீசார் வந்தார்கள். என்னை விசாரித்தார்கள்.

5. நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக்கொண்டார்கள். என்னிடம்

கையொப்பம் பெற்றார்கள். புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது. என்னிடம் படித்து காண்பித்தார்கள். நான் சொன்ன படி எழுதப்பட்டிருந்தது. அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். என்னை மீண்டும் போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

குறுக்கு விசாரணை இல்லை

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)